Editor's Note

Please address all communication for the English pages to **The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 6th NOVEMBER, 1981 No. 45

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription

Inland: Rs. 35/- per year.
Single issues are available at the VARANY MISSION PRESS CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.
Apply to:
The Manager,
'Morning Star', Vaddukoddai.

RECEIVED -11-17 PERIODICALS DIVISION

Press Censorship

Under the existing State of Emergency, Press Censorship has been brought into operation from 21-8-81. The Competent authorities are the Secretary to the Minister of State and the Director of Information.

Christian Agencies Help Victims of Atrocities in Jaffna

A grant of one hundred and fifty three thousand rupees from the World Council of Churches has reached the Jaffna Christian Union to help restore the Jaffna Public Library which was burnt on 1st June 1981. The JCU Committee at its meeting held on the 4th November 1981 with President Rt. Rev. D. J. Ambalavanar in the chair, appointed a sub-committee consisting of the Rev. J. Sarvananthan Secretary of the JCU (Convener) Messrs. R. E. J. A. Setukavalar, Silan Kadirgamar and J. G. Arasaratnam to select books of the value of the rupees one and half lakhs and order them from book sellers in Sri Lanka and / or abroad.

The National Christian Council of Sri Lanka has granted a sum of rupees thirty thousand from its Emergency Relief Fund to the Jaffna Christian Union to help the families whose bread-winners were shot dead in Jaffna on the eve of the District Development Council election last June. The Treasurer of the JCU Mr. W. G. Annappah reporting to the Committee said that he has contacted five such families and according to their needs, placed in fixed deposits varying amounts at the bank so that each family will receive mothly interests amounting between Rs. 100/- and Rs. 200/-.

The Treasurer also reported that of the rupees fifty thousand sent to the JCU by the NCC Development Commission (Rev. Kenneth Fernando Covener) to support the AFFECTED FAMILIES SELF HELP LEAGUE in Jaffna, rupees forty thouasnd has already been utilised to equip the League's Sewing Centre at Nallur and to provide the young widows capital to start small shops or goats to rare at home The members of the League are "wives of victims of State terrorism durin⁸ Emergency '79" says their report.

IN MEMORIAM

Rev. A. C. Thurairajah

OF KOPAY

"This poor man cried and the Lord heard him"

Affectionately remembered by his wife, daughters and sons-in-law.

The Parsonage
Kilinochchi 15-11-1981

English Day at St. John's

The English Union of St. John's College, Jaffna presented a three-hour long programme of English drama, oratory, poetry, recitation, instrumental and vocal music by pupils of classes from Grade 2 to 12 on their annual English Day 30th October 1981. Mr. & Mrs. J. M. Sabaratnam were the Chief Guests. Certificates were awarded to winners of competitions conducted by the Union in Spelling, Reading, Writing, Music, Poetry, Speech, Essay, Short Story and Verse writing. Jayanthan A. Anandarajan carried away the highest number of prizes — seven in all including four firsts. The cup for the Most Enthusiastic Participant was awarded to Dhayakaran Jesuratnam who delivered the prize-winning speech in the Senior division and played the title role in the assassination scene from Shakespeare's "Julius Caesar".

PERSONAL

V. Mithiranandan son of Mr. & Mrs. J. N. Vijayaratnam of Earlalai North has graduated from the City University of London, UK with a Bachelor's degree in Computor Engineering.

Archbishop Blanch of York at Diocese of Colombo Foundation Anniversary

The Church of Ceylon Diocese of Colombo is celebrating the 136th Anniversary of its foundation on the 7th of this month. At the Anniverssary Service to be held in the Cathedral on Sunday the 15th inst., the preacher will be the Most Rev. & Rt. Hon. Stuart Blanch, Lord Archbishop of York. He will also deliver two lectures on Saturday the 14th on "Recourses of Christian Mission" and "A Hallowed Past — A Dynamic Future" in the Diocesan Council Hall.

New Chaplains for Teachers' Colleges

The Jaffna Christian Union has taken responsibility for the pastoral care of Protestant Christians in the Government Teachers' (Training) Colleges at Palaly and Kopay. The JCU Committee appointed this month the Rev. Isaac Selvaratnam of the Church of Ceylon and the Rev. S. Manopavan of the JDCSI as part-time Chaplains of the two colleges respectively.

A Senior Teacher Comments on the White Paper

The following are extracts from a paper presented at a Semiar by Mr. T. Visvanathan, the President of the Northern Province Teachers' Association Private and an ex-Vice-President of the the All Ceylon Union of Teachers.

"The White Paper on Education that is being discussed in the Country has among other things a novel feature in the introduction of school clusters. The management of schools under the proposed set up is bound to have advantages. The main advantage is going to be the cutting down of a number of wastages.

"It would certainly be considered desireable and economical to have some of the schools in the cluster units run as dual session schools catering to two groups of students. This will enable the buildings to be utilised over a greater period of time per day. At the moment most of the schools are functioning for about six hours per day. For the rest of the time they are virtually closed. Surely the utility time of some of our schools could be doubled and run for about twelve hours a day. If such a programme is satisfactorily effected our schools can meet the increase in population of the school-going children without extra buildings for another ten years or so. The Government too would be able to save a substantial amount of money that it would normally spend on school buildings. Also some teachers too could be employed to teach in both the sessions and some additional allowances paid to them avoiding the problem of finding some needed teachers. Further such a step would help to solve the problem of shortage of Science teachers and Mathematics teachers effectively. The Dual Session Schools are bound to help to solve the varied problems of the big schools or the proposed unitary schools as well.

"The teacher probably is the employee who is paid worst by the State. This is mainly due to the large number of persons involved in the profession. Any how why not give this poor group what they deserve a little early. No wonder the teachers are trying to go to Nigeria as they are given princely salaries there. But here again the Nigerian teams that come to Sri Lanka to recruit teachers are are not given Visas to interview the prospective teachers. This is not at all fair. Let the State review the position and allow the teachers too to earn some valuable Exchange. Also it would not be out of place to pinpoint the position of the Private School Teacher. The Private Schools are being given aid and are being recognised as educational institutions helping to maintain the educational standards of the country. Therefore, the teachers in such schools too must be given the same right as those in the State as far as their Pensions and "Widows & Orphans Pensions" are concerned."

In loving memory of

Regina Ratnammah Selliah

Called home:
15th November 1976

"She stood beautiful before God And in concord with all men".

An Appreciation

S. P. Sabaratnam

It is with a keen sense of great sorrow that one from known society records the death of Sabaratnam Master, — as was popularly known to his past students and close accociates. Though he was blessed with a full fledged four score and little less than five years of life in this world yet his close associates would surely miss him a lot as he has gone beyond the veil leaving back his mortal frame to suffer the claim of elements and no semblence of his physical appearance adorned with an ever smiling face to the yearning remembrance of his loved ones. Many of his associates would remember him as an exemplary teacher, a good friend, an affectionate parent, a loyal citizen, and as a pious devotee practising the Christian faith. In the midst of his love for his students he maintained discipline and propergated peace and goodwill to flourish in the veins of all who passed through him. Enriched with matured experience in life he was always found to be a good adviser to many a troubled heart, inexhaustibly fond of any situation faced with. He would not cringe or submit to any form of injustice that comes to his notice, but would ever be prepared to edify and was pleased to see the good results of his efforts. He was one who cherished in the faith that love and good-will with peace should cover and protect one's life in this world. As a parent he enjoyed an infinite stock of love and affection amongst his own small stock. Children too in return reciprocated this in double fold. As a member of a family he was left all alone to steer his own canoe despite the fact there were many around him. Whilst putting all his sterling qualities in one scale and the number of years that he had spent in our midst into the other it would appear that his noble qualities and usefulness outweigh the weight of his years. Hence it is apparent that one would always remember his passing away with a deep sting in one's heart. Deepest sympathies go to the bereaved ones. May his soul rest in peace.

— *A. Y. R.*

உதயதாரகை
UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 141] 6 — 11 — 1981 [இதழ் 45

சமயத் தோடொத்த வாழ்க்கை

தற்காலத்தில் முன்னிலும் அதிகமாக, உலகின் சகல நாடுகளிலும் நடந்து கொண்டு வரும் கொலைகள், கொள்ளைகள், அநியாயங்கள், அட்டூழியங்கள் இளவயதினராலேயே செய்யப்படுவதைக் காண்கிறோம். இதற்கான காரணம் என்ன?

வாலிபர் ஏதோவொரு உன்னத காட்சியைக் காண்கிறார்கள்; உன்னதமானவொரு சமுதாயத்தை உருவாக்கும் கற்பனுலகில் வாழ்கிறார்கள். இன்றைய சமுதாயம் நோய்வாய்ப்பட்டுப் போனதெனச் சிந்திக்கிறார்கள் எனினும் அப்பேர்ப்பட்ட வொரு சமுதாயத்தை வருவிக்கும் வாய்ப்பைக் காணாததால், வசதியைப் பெறாததால் மனங் கொதித்துத் திரிகிறார்கள்; சிந்தை சிதறித் திரிகிறார்கள் எனப் பலரும் காரணங் காட்டுகிறார்கள்.

இதைத் தகுதியுடைய காரணமெனக் கொள்ளாமல், தகாததைச் செய்வதற்குச் சாட்டுப்போக்கெனவே கொள்ள நாம் ஏவப்படுகிறோம். அந்தளவு உயரிய சமுதாயத்தை உருவாக்கும் ஆவலுடையோர் இழிவுச் செயல்களுக்குத் தம் மனதைத் திருப்புவது இந்தளவு எளிதாகுமோ? உன்னத நோக்கமும் இழிவு மனப்பான்மையும் ஒருவன் உள்ளத்திற் குடிகொண்டிருப்பதெப்படி?

நமது நாட்டைப் பொறுத்தமட்டில், இளஞ் சந்ததியார் உயர்ந்த நோக்கங்களைக் கொண்டவராய் வளர்ந்துவர வேண்டுமென்ற சிந்தனையால் நமது பாடசாலைகள் ஆதி தொட்டே சமயக் கொள்கைகளைப் போதித்து வந்தன. மார்க்க சம்பந்த காரியங்களிற் பெற்றோரும் அக்கறை காட்டியதுடன் பிள்ளைகளும் அவ்வழியே செல்வதற்கு உதவியும் ஊக்கமும் அளித்தனர். சமயப் பற்று வாழ்க்கையைச் சீர்ப்படுத்தியது; மார்க்க கொள்கைகள் வாழ்விற்கு அர்த்தம் கொடுத்தன; வாழ வழிகாட்டின.

இப்பொழுதும் சமய அறிவு புகட்டப்படுகிறது — அநேக பாடங்களில் இதுவும் ஒன்றாக. கீழ் வகுப்புக்களிற் சமயம் ஒரு கட்டாய பாடம். பயன் ஏதும் உடையதாயோ அற்றதாயோ அது ஒரு பாடமாய் எடுக்கப்பட வேண்டியது. வாழ்க்கையோடு சம்பந்தப் பட்டதாய் அதைப் புகட்டவோ படிக்கவோ கட்டாயம் எதுவும் இருப்பதாய்க் காணவில்லை.

உயர் மட்ட வகுப்புக்களிற்கூட இதுவும் ஒரு பாடம். பரீட்சைகளுக்குக் குறிக்கப்பட்ட பாடத் தொகுதிகளில் சிலவற்றில் இதற்குமோர் இடமுண்டு. எடுக்கலாம், விடலாம் என்றதால் அநேகர் எடுப்பதாய்த் தெரியவில்லை.

ஏனெனில் பிற்பாடு இதற்கு மதிப்பில்லை. எந்தத் துறையில் வேலை தேடுகிறார்களோ அந்தத் துறைக்குரிய பாடங்கள் உண்டு; அவை கட்டாயமாகத் தேவைப் படுபவை. சமயம் என்றொரு துறையில்லை; ஆயினும் வாழ்க்கை முழுவதையும், சகல துறைகளையும், அது வியாபித்திருப்பதெனக் காண்பாரும் இல்லை, ஆதலாற்றான் இவ்வவல நிலை.

எந்தெந்தத் துறையிலே வேலை தேடினும் அப்படித் தேடுவோர் பொய் சொல்லக் கூடாது, களவு செய்யக் கூடாது, லஞ்சம் பெறக் கூடாது, உத்தியோக பூர்வமாய்க் காணவருவோர் மீது கடிநாய் போற் பாயக்கூடாது — என்றெல்லாம் எதிர் பார்க்கிறார்களல்லவா? அப்படியானால் நற்குணங்கள் அனைத்துக்கும் ஆதாரமாய் விளங்கும் சமயப் பற்றை வேலை தேடுவோருக்கான கட்டாய நிபந்தனையாய் அரசாங்கமோ தனியார் நிறுவனங்களோ கொண்டாலென்ன? பயன்தருமென்பதே நமது கருத்து

பிள்ளைகள் விடயமாய்ப் பெற்றாரின் பொறுப்பு என்ன? "பிள்ளைக்கு ஏன் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை?" எனக் கேட்டால்: "இப்போ என்ன அவசியம்; அவன் வளர்ந்து, அறிவு வந்து, எது சரியெனச் சிந்தித்து ஆலோசித்து அதன் பின்பு எடுக்கட்டுமே" என்ற மூட விடையளிக்கும் எத்தனை பெற்றார் நம மத்தியிலே வாழ்கின்றனர்! பாடசாலை என்றால், டியூசன் என்றால் வேலை நோக்கம் என்றால் இரவு பகலாய்ப் புத்தி புகட்டும் பெற்றார்; தேவையென்றால் பிரம்பும் எடுக்கும் பெற்றார்; சமயத்தைக் குறித்தோ "அது அவரவர் விருப்பம்" என்பது எவ்வளவு மடைமை.

இப்பேர்ப்பட்ட பெற்றாரிற் பலரும் பிற்காலத்தில் தமது பிள்ளைகளின் அடங்காத வாழ்க்கையையோ, அவதூறான செயல்களையோ, "தகுதியற்ற" கலியாணத்தையோ குறித்துப் பிரலாபித்துக் கொண்டு போவதைக் காண்கிறோமே.

வாழ்க்கை சமயத்தைத் தழுவிக் கொண்டிருக்க வேண்டியது. ஏனெனில் சமயக் கோட்பாடுகளே மனிதன் தன் படைப்பின் தெய்வத்திற்கும் தன் உடன் பிறந்தார் மனித குலத்திற்கும் எவ்வாறு, எந்தளவு கடமைப்பட்டுள்ளவனெனக் காண்பிக்கும்: இது சிறு பராயம் தொட்டே வர வேண்டிய; வளர வேண்டிய ஒரு பற்று: இடை நடுவே பெறுவதரிது. இது குன்றுவதே வாழ்வின் தாழ்வுக்கு நியாயமெனக் கொள்கிறோம்.

உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக

[ஆதீனக் கிறிஸ்த இல்ல விழாவில் திருமதி R. S. பார்மர் அவர்கள் ஆற்றிய உரையின் சாராம்சம்.]

பூமியிலே தன் வாழ்நாள் நீடித்திருக்கும்படி மனிதன் தன் தகப்பனையும் தன் தாயையும் கனம் பண்ண வேண்டுமெனக் கர்த்தர் மோசே மூலமாக இஸ்ரவேல் சனத்திற்குக் கொடுத்த பிரமாணம் மிக முக்கியமானவொன்று. சகல சமயங்களும் இதன் உண்மையை உணர்ந்து இதைக் கடைப்பிடிப்பதன் அவசியத்தை மேன்மைப்படுத்திக் கூறும்.

ஆண்டவராகிய இயேசு ஒரு பாமரக் குடும்பத்திலே பிறந்தவர். சுமார் முப்பது ஆண்டுகளாக ஒரு பிள்ளையாகவும் வாலிபனாகவும் வயதில் மூத்தவராகவும் தமது வீட்டுக்கும் குடும்பத்துக்கும் ஆற்ற வேண்டிய பணிகளையாற்றித் தம் உடன் பிறந்தார் வயது வந்து வீட்டுப் பொறுப்புக்களைக் கையேற்கும் காலத்திற்றான் அவர் தன் ஊழியத்திற்காகச் சென்றனர் என நாம் சிந்திக்கக் கூடும். நாயின் ஊர் விதவையின் குமாரன் மரித்தபோது அவர் காட்டிய அனுதாபம், இது போன்ற பிற சம்பவங்கள் அவர் பெண்களை எவ்வளவு கண்ணியப் படுத்தினார் எனக் காண்பிக்கின்றன.

பிசாசு பிடித்தவர்களைக் குணமாக்கியபோது திரும்பிப் போய் வீட்டாருக்கு அந்த நற்செய்தியைக் கூறும்படி பணித்தார். சிலுவையிலே, தாம் மரிக்கும் அவ்வேளையிற் கூடத் தமது தாயையிட்டு அவர் கொண்ட கரிசனையைக் காண்கிறோம்; அவரைப் பராமரித்து நடத்தும்படி தன் சீஷனைக் கேட்கிறார். தன் தாய்க்கும் தன் தகப்பனுக்கும் தாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாது, "செய்ய வேண்டியதெல்லாம் அர்ப்பணம்" எனக் கை கழுவி விடுவோரை அவர் எவ்வளவாய்க் கண்டிக்கிறார் என்பதையும் நாம் காண்கிறோம்.

நமது காலத்தில் நிலைபரங்கள் எப்படி? தமது குடும்பங்களுக்கும், பிரதானமாகப் பிள்ளைகளுக்கும், தாம் செய்ய வேண்டியவற்றைக் கவனியாமல் சமூகப் பணி செய்யப் புறப்பட்டுப் போகும் பெண்கள் உளர். பிள்ளைகளைப் போதிய பொறுப்பின்றி விட்டுப் பணம் சேர்க்கப் புறநாடு செல்லும் பெற்றாரையும் காண்கிறோமல்லவா? இவற்றாற் குடும்பங்கள் சீர்கெட்டுப் போகின்றன

சமூகவியலாளர் "சந்ததிப் பிளவு" (Generation gap) எனவொன்றைக் குறிப்பிடுகிறார்கள். இந்தப் "பிளவு" நிரப்பப்பட அல்லது மூடப்பட வேண்டும். ஒரு பாலத்தைக் கட்டுவோர் இருமருங்கிலுமிருந்து கட்டிக் கொண்டு வருவதுபோல், இந்தச் சந்ததிப் பிளவை நீக்கச் செய்யப்படுபவையும் இருமருங்கிலுமிருந்து செய்யப்பட வேண்டிய தவசியம்; வேறு வழியில்லை. பெற்றாராகிய நாம் இயேசுவின் ஒளியைப் பெற்று அதை நம் பிள்ளைகளுக்குப் பிரதிபலிக்க வேண்டும் — அல்லது கொடுக்க வேண்டும். அதை நாம் பெறவும் வேண்டும்; கொடுக்கவும் வேண்டும். கலிலேயாக் கடலும் சாக்கடலும் ஒரே நதியிலிருந்து நீரைப் பெறுகின்றன; எனினும் முந்தியது "சீவனுள்ள கடல்" பிந்தியது உயிரற்றது; ஏனென்றால் ஒன்று பெறுகிறது; வெளிப்பாய விடுகிறது; மற்றது பெறுகிறது; வெளியே விடுவதில்லை; அதனால் கழிவுப் பொருட்கள் தேங்கிப் போகின்றன.

நாம் நமது பெற்றாரைக் கனம் பண்ண வேண்டும். அப்பொழுதான் நமது பிள்ளைகளும் தமது பெற்றாராகிய நம்மைக் கனம் பண்ண அறிந்து கொள்ளுவார்கள் — ஊசி செல்லும் பாதையே நூல் செல்லும் பாதையாவது போல. நாம் நமது பிள்ளைகளுக்கு மாதிரியாக வேண்டும்.

அல்பேட் டூரர் வரைந்த "கும்பிடும் கரங்கள்" படத்தை அறிவோம். நமது கரங்களும் நமது பிள்ளைகளுக்காகக் கும்பிடும் கரங்களாயமைய வேண்டும். அவை கடும் பணி புரிந்து, சித்திரம் வரைவதற்குப் பயனற்ற கரங்களாய்ப் போயினும் அவை கும்பிடும் கரங்களாய்ப் பயன் பட்டன. நமது பிள்ளைகளுக்காகப் பாடுபட்டுழைக்கும் கரங்களும் அவர்கள் உத்தமராய் வர வேண்டுமெனக் கும்பிடுங் கரங்களாய் அமையட்டும்.

வலது குறைந்தோர்

[வலது குறைந்தவர்களின் ஆண்டாகிய 1981இல் கிறிஸ்தவ உத்தரவாதம் பற்றிய சில சிந்தனைகள்.]

— கனம் நேசன் கதிர்காமர் —

வருடாவருடம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஒவ்வொரு ஆண்டையும் ஒரு பிரத்தியேக சேவையைப் பற்றி பொருள் பற்றி சிந்திக்குமாறு, செயல்படுமாறு அமைக்கின்றது. ஆகவே 1979ம் ஆண்டு பிள்ளைகள் வருடமாகவும், 1980ம் ஆண்டு குடும்ப ஆண்டாகவும், 1981ம் ஆண்டை வலது குறைந்தவர்களின் அல்லது ஊனத்துவம் அடைந்தவர்களின் ஆண்டாகவும் பணித்துள்ளது. இவ்வாறு ஒவ்வொரு வருடத்தையும் ஒரு பொருள் பற்றி சிந்திக்க பிரத்தியேகப்படுத்தும் பொழுது அந்த வருடம் முடிந்தபின் அப்பொருள் பற்றிய நமது உத்தரவாதங்கள் முடிந்துவிட்டது எனக் கூறலாகாது. 1979ம் ஆண்டு பிள்ளைகளின் ஆண்டாக இருந்தால் கூடிய சிந்தனைகள், செயல்கள் பிள்ளைகள் பற்றியதாக இருக்க வேண்டும். ஆனால் அந்த ஆண்டிற்கு பின்வரும் ஒவ்வொரு ஆண்டிலும் பிள்ளைகள் பற்றிய நமது பொறுப்புக்களை, சேவைகளைத் தொடர்ந்து செய்ய வேண்டும். இதேபோல 1981ம் ஆண்டு வலது குறைந்தவர்களின் ஆண்டாக நினைவுகூரும்பொழுது நாம் முன்பு ஒருபோதும் சிந்தியாத, சேவையாற்றுத பல காரியங்களை, கருமங்களை வலது குறைந்தோர் பொருட்டு ஆற்ற அழைக்கப்படுகின்றோம். ஆனால் இந்த ஆண்டில் செய்யப்பட்ட சிந்தனைகள், செயல்கள் சிறந்த கனிகளைக் கொடுக்கும் பொருட்டு நாம் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டிலும் இதே சேவையை செய்ய முயற்சிக்க வேண்டும்.

தொடர்ந்து வரும் ஆண்டுகளில் இந்த சேவையை செய்ய வேண்டும் என்பதற்காக இந்த ஆண்டின் இறுதி பாகத்தில் இக்

(3-ம் பக்கம் பார்க்க)

பூமியிலே சமாதானம்

[பேராயர் நியூபிகின் அவர்கள் சில வருடங்களுக்கு முன் எழுதி மணிமலரிற் பிரசுரித்த கட்டுரை. நமது காலத்திற்கான பொருத்தம் கருதித் தருகிறோம் மாறிய சூழ்நிலைக்கேற்பச் சில மாற்றங்களைச் செய்துள்ளோம். — ஆசிரியர்.]

உலகின் பல பாகங்களிலும் மாற்றங்கள் உண்டாகி வருவதைக் காண்கிறோம். பரம்பரையாக போற்றிப் பேணி வந்த மரபுகள் பண்புகள் யாவும், வளரும் சந்ததியாரால் இப்போது நிராகரிக்கப்படுகின்றன. வாழ்க்கையில் அமைதியைத் தேடும் நாட்டம் இல்லை. சட்டத்தையும் மதிக்காது போராடி, மனித வாழ்வுக்குக் கேடு செய்யும் தீமைகளை உடனடியாக முறியடிக்க வேண்டும் எனும் எண்ணம்தான் மேலோங்கி நிற்கிறது. விசுவாசிகளான பல கிறிஸ்தவரும்கூட, இன்றைய உலகப் பிரச்சினைகளை வன்முறையைக் கையாளாமல் தவிர்க்க முடியாது என்னும் முடிவுக்கு வருகிறார்கள்.

சில வருடங்களுக்கு முன் உலக கிறிஸ்தவச் சங்கம் தன் சேமிப்பில் காற்பாகத்தை ஆபிரிக்காவில் இனப் பிரச்சினையை வன்முறைகள் மூலம் எதிர்க்கும் ஸ்தாபனங்களுக்கு அளித்து உதவியது. இது சரித்திரத்தில் இடம் பெறக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சி என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பணம் வன்முறை செயலுக்கென அளிக்கப்படவில்லை. ஆனால், வன்முறைகள் மூலம் செயல்படுகிறவரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது உலகுக்கு சமாதானத்தை உண்டாக்க வந்த கோமகனின் எண்ணத்துக்கு எதிர்மாறானது என்று நமக்குத் தோற்றவில்லையா?

இந்தக் கேள்விக்குப் பதில் கூறுமுன் சில கேள்விகளை நாமாகக் கேட்டுக்கொள்வோம்.

ஒவ்வொரு ஆண்டும், “உலகில் சமாதானம்; மனிதருக்குள் நல் உறவு” என்று தூதர் பாடிய கீதத்தை திரும்பக் கேட்கிறோம். அவரை வணங்கக் கூடுகிறோம். மாட்டுத் தொழுவத்தில் பிறந்த குழந்தையை எண்ணும்போது நம் நெஞ்சம் இளகுகிறது. ஆனால் ஆராதனை முடிந்தபின் நடப்பது யாது? வசதியான வாழ்க்கைக்கு நாம் திரும்பிவிடுகிறோம். பஞ்சணை மெத்தை வேண்டும் நமக்கு படுத்து உறங்க. சென்னை சேரிப் புறங்களில் வாழும் குழந்தைகளுக்குச் சுத்தமான படுக்கைகள் கிடையாது. இதை நாம் நினைப்பதுண்டா?

கடவுள் வாக்களிக்கும் சமாதானம், வசதியாக சமாதான வாழ்க்கை நடத்துவதாக எண்ணி வாழ்கிறவருக்குத்தான் முதலில் அவசியம் என்பது நமக்குத் தெரியுமா?

கொடுமைப்படுத்தப்படுகிறவர், அநீதியான சட்டங்களுக்கு அடிமையாகிப் போகிறவர், சமூகப் பொருளாதார வாழ்வில் கொடூரப் பழக்கங்களுக்குப் பலியாகிப்போகிறவர் — இவர்கள் பற்றி அக்கறை காட்டாது வாழ்கிறவர், கடவுள் கொடுக்கும் சமாதானத்தை இன்னும் அனுபவத்தில் காணாதவர்!

தீர்க்கர் சிமியோன், மரியாளையும் அவள் கைக்குழந்தையையும் வாழ்த்தியபோது கூறியது நினைவிருக்கிறதா?

‘இந்தக் குழந்தை பலரின் தாழ்வுக்கும் உயர்வுக்கும் காரணமாக இருக்கும்.’

அப்படியே நடக்கவும் செய்தது. பலமுறை நடந்தும் வந்திருக்கிறது. இஸ்ரவேலர் பெருமையோடு பாதுகாக்க முயன்ற வாழ்க்கைமுறை, ஆராதனை, நியாயப்பிரமாணம் இவற்றுக்கு அழிவை அல்லவா கிறிஸ்துவின் வருகை கொண்டுவந்தது? எவர்களை ஒதுக்கி ‘இவர்கள் புறஜாதியார்’ என்று குறைவாகக் கருதினார்களோ அவர்கள் உயர்வடையக் காரணமாகவும் இருந்தது. இதனால் வெந்துபோன நெஞ்சங்கள் எத்தனை எத்தனை! உன் நெஞ்சில் ஒரு வாள் பாயும் என்ற சொல் பொய்யாகவில்லை.

கிறிஸ்தவ நற்செய்தி புரட்சிகரமானது. மக்களை ஏமாற்றிப் பிழைப்பவர், கொடுமை செய்கிறவர், நீதிக்குத் துரோகம் செய்கிறவர் — இவர்களை அது நியாயம் தீர்க்காது போவதில்லை

இதனால் அநீதியை அடக்குவதற்காக வன்முறையில் புரட்சி செய்யும் இயக்கங்களுக்கு இயேசுகிறிஸ்துவின் பெயரால் உதவி செய்ய முன்வருகிறவரை நாம் கண்டிக்க முடியாது. சில சந்தர்ப்பங்களில் மனிதனின் அநீதிக்கு முன் கடவுளின் நீதிக்கு சாட்சி கூற இது ஒன்றுதான் வழி.

ஆனால் ஒன்று:

உலக சரித்திரத்தைப் படித்துப் பார்த்தால், எங்கெங்கு புரட்சி மூலம் நீதி நிலைநிறுத்தப்பட்டதோ, அங்கு புது முறைகளில் அநீதியும் அதர்மமும் முளைத்துக்கொள்வதைக் காணலாம். வன்முறைகளைப் பயன்படுத்தும் புரட்சி, வெற்றியடைந்தவுடன் அது அநீதிக்குச் சின்னமாகிவிடுகிறது. இதனால் நாம் சாதாரணமாக கூறுகிறோம்: “எப்படியாவது சமாதானமாக இருந்தால்போதும். மனிதன் தன்னலப்பிரியன் என்றுதான் தெரியுமே. எந்த அரசாங்கம் வந்தால் என்ன? என்ன சட்டம் இருந்தால் என்ன? இருக்கும் நிலைமையை எப்படியாவது சமாளித்து வாழ்க்கையை வசதியாக்கிக் கொள்வோம்.” இந்த எண்ணங்களுடன் வாழ்க்கையின் முரண்பாடான நிலைமைகளை ஒன்றுபடுத்தி சமாளிக்க முயன்று வருகிறோமேயன்றி இப்போதுள்ள நிலையைச் சீர்படுத்தும் செயலில் ஈடுபடாது இருந்துவிடுகிறோம்.

(தொடரும்)

வலது குறைந்தோர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுரையை வரைய தீர்மானித்துள்ளேன். வலது குறைந்தவர்களை நாம் ஆராயுமிடத்து அவர்களை ஓரளவிற்கு நான்கு பிரிவுகளாக பகுக்கலாம். (1) பிறப்பினால் ஊனத்துவம் அடைந்தவர்கள் (2) விபத்தினால் வலம் குறைந்தவர்கள் (3) நோயின் காரணமாக சரீரத்தில் குறைபாடுகளைக் கண்டவர்கள் (4) கடைசியாக போரிலே ஈடுபடும் காரணமாக அங்கவீனம் அடைந்தவர்கள். நான்காவதாகக் கூறப்படும் பிரிவு அதிகமாக தேசப் படைகளில் சேவை செய்வோர் மத்தியில் ஏற்படுகின்றன, தேசத்திற்காகச் சேவை செய்யும் பொருட்டு பிற நாடுகளுடன் போரில் ஈடுபடுவதால் இந்த நிலைமை ஏற்படக்கூடும்.

உண்மையில் இந்த உலகத்தில் பிறக்கும் எல்லா மனிதரும் ஓரளவிற்கு குறைபாடுகள் உள்ளவர்கள் என்றே கூறவேண்டும் ஒருவேளை கடவுளின் திருமைந்தனாகிய எமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவை விட சரித்திரத்தில் உதித்த எல்லா மனிதரும் குறைபாடுகள் உள்ளவர்கள் என்றே கூறவேண்டும். ஆனால் எமது ஆண்டவரும் கூட தனது சரீரம் முறியடிக்கப்படுவதற்கு தன்னை தாமே ஏக பலியாக சிலுவையில் ஒப்புக் கொடுத்தார். ஆனால் அவர் பூரணத்துவம் அடைந்த மனிதனாகையால் மரணத்தையும் ஜெயித்தார் என்பது வெளிப்படை. ஆகவே சரீரம் முறியடிக்கப்படுவதற்கு தன்னை ஒப்புக் கொடுத்த பொழுதிலும் குறைபாடுகள் அற்ற பூரணத்துவம் உள்ள மனிதன் என்று எமது இரட்சகர் ஒருவரை மட்டுமே அவ்வாறு கணிக்கலாம்.

எனினும் வலது குறைந்தவர்களைப் பற்றி நாம் சிந்திக்கும்போது மனிதர் பார்வையில் மனிதரை இரு பிரிவினராகக் காட்டலாம். (1) சரீர குறைபாடுகள் அற்றவர்கள். (2) ஏதோ ஒருவிதத்தில் சரீர குறைபாடுகள் உள்ளவர்கள். இரண்டாவது பகுதியில் கூறப்பட்டவர்களையே நாம் அதிகமாக வலம் குறைந்தவர்களாகக் கணிக்கின்றோம்.

சரீரத்தில் குறைபாடுகள் இருந்த பொழுதிலும் அவர்கள் மனித ஆள்தத்துவம் (Human Persanality) அற்றவர்கள் எனக் கருதக்கூடாது அவர்களை பூரண மனிதர்களாக கணிக்க வேண்டும். (We Should treat them as whole Persons) சமுதாயம் அவர்களை முற்றாக ஏற்க வேண்டும், அங்கீகரிக்க வேண்டும்.

வலது குறைந்தவர்கள் அதிகமானோர் எதிர்நோக்கும் ஒரு முக்கிய பிரச்சினை அவர்களுடைய அங்க இழப்பு அல்லது ஊனத்துவம் அல்ல. ஆனால் சமுதாயப் புறக்கணிப்பேயாகும். வலது குறைந்தவர்கள் வளர்ந்து வரும்போது ஓரளவிற்கு தமது இக்கட்டான நிலையை உணர்ந்து, தம்முடைய நிலைமையைத் தாம் அங்கீகரிக்க முயற்சிக்கிறார்கள். ஆனால் சமுதாயம் தாம் அறிந்தோ, அறியாமலோ அவர்களைப் புறக்கணிப்பதால் அவர்களை அதிகம் மனம் புண்படச் செய்கின்றது.

(தொடரும்)

பலதும் பத்தும்

(முற்றொடர்ச்சி)

இப்பறவைகளின் செயலை ஆண்டுதோறும் கவனித்து வந்த விஞ்ஞானிகள், இவ்வருடம் சில கூட்டப் பறவைகளைப் பல மாதங்கள் முன்பே கூண்டுகளில் அடைத்து வைத்து, இட வசதியையும் உணவையும் அளித்து, அவதானித்து வந்தனர். இவ்வாறு பேணப்பட்ட பறவைகள் தற்கொலை செய்யமாட்டா எனவும் எதிர்பார்த்தனர். ஆனால் தற்கொலை செய்துகொள்ளும் காலம் அண்மித்ததும், இப்பறவைகள் தொடர்ந்து பல நாட்கள் உணவுகளை உட்கொள்ளாமல் விட்டு இறந்துபோயின. இவற்றின் இச்செயல் விஞ்ஞானிகளையும் ஆய்வாளர்களையும் மேலும் வியப்பிலாழ்த்தியுள்ளது.

● நமது நாட்டின் தேசியச் சொத்துக்களில் ‘வில்பத்து வன விலங்குப் பூங்கா’வும் குறிப்பிட வேண்டியவொன்று ஆகும். இயற்கையாலும், பிற விலங்குகளாலும் மனிதராலும் அழிந்துகொண்டுபோகும் மிருகங்களுக்குத் தக்க பாதுகாப்பும் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலையும் ஆங்கு வழங்கப்படுகின்றன. இதனால் நமது நாட்டில் அற்றுப்போகும் நிலையை அடையாமல் மிருக இனங்கள் பாதுகாக்கப்படுகின்றன. மன்னார் மாவட்டத்தின் வட எல்லையையும் புத்தளத்தின் தென் எல்லையையும் கொண்டுள்ள இப்பூங்காவின் மேற்கு எல்லை கரையோரப் பகுதியாகும். இக்கரையோரப் பகுதி வழியாகத் திருடர்கள் இப்பூங்காவில் உள்ள விலங்குகளைக் களவாடிச் செல்கின்றனர். சமீபகாலமாக இக்களவுகள் அடிக்கடி நடைபெறுகின்றவென வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் அறிவிக்கின்றது. இத்திருட்டுகளை ஒழிப்பதற்கான ஒரு நடவடிக்கையாக விரைவில் இம்மேற்குக் கரையோரப் பகுதியில் ஒரு காவல் நிலையத்தை அமைக்க அரசினர் தீர்மானித்துள்ளனர்.

இதுவரை காலமும் இப்பூங்காவைப் பார்வையிடுவதற்கு மக்கள் ஜீப் வண்டிகளில் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். ஆனால் விரைவில் “மினி பஸ்” வண்டிகளிலும் சென்று அவதானிக்க அனுமதிக்கப்படவுள்ளனர். இதனால் வசதி குறைந்தோரும், பாடசாலை மாணவர்கள் போன்ற குழுக்களும் ஒரு வண்டியை ஏற்பாடு செய்து குறைந்த செலவில் இவ் வனவிலங்குப் பூங்காவைப் பார்வையிடக்கூடியதாகவிருக்கும். இதற்காக இப்பூங்காவின் வாகனங்கள் செல்லும் பாதைகள் அகலமாக்கப்பட்டு வருகின்றன.

● இவ்வருடமும் ஆறு முக்கிய துறைகளில் சிறப்பாக இயங்குபவர்களுக்கு நோபல் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு வருடமும் பௌதிகம், இரசாயனம், மருத்துவம், சமாதானப் பணி, இலக்கியம், பொருளியல், விஞ்ஞானம் எனும் துறைகளில் மெச்சிடக்கூடிய பணியைப் புரிபவர்களுக்கு நோபல் பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் ஐந்து துறைகளுக்குமான பரிசுகள் 1901ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றன. சுவீடன் நாட்டைச் சேர்ந்த அல்பிரட் நோபல் எனும் செல்வந்தர் தனது சொத்துக்களில் 90 இலட்சம் டொலர்களை இவ்வைந்து பரிசுகளையும் ஆண்டுதோறும் வழங்கக்கூடியவகையில் முதலீடு செய்திருக்கின்றார். அவருடைய பெயரே இப் பரிசுகளுக்கு இடப்பட்டுள்ளது. 1969ஆம் ஆண்டு தொடக்கம் பொருளியல் விஞ்ஞானத் துறையில் மேம்பட்டு விளங்குபவருக்கும் இப்பரிசு வழங்கப்படுகின்றது. இதற்கான தொகையை சுவீடன் தேய மத்திய வங்கி கொடுத்து வருகின்றது. பௌதிகம், இரசாயனம், மருத்துவம் ஆகிய துறைகளில் பரிசுக்கு ஏற்றவரை Royal Academy of Stokholm எனும் கலாசாலையும், பொருளியல் நிபுணரை Heraline Institute of Stokholm எனும் கலாசாலையும் இலக்கியத் துறையில் சிறந்து விளங்குபவரை Swedish Home for Literature எனும் கலாசாலையும் தெரிவு செய்கின்றன. நோர்வே நாட்டுப் பாராளுமன்றம் நியமனம் செய்யும் ஐவர் குழுவொன்று சமாதானத்துக்கான பரிசுபெற்றவரைக் கண்டுகொள்ளும். திரு. அல்பிரட் நோபல் அவர்களின் பிறந்ததினமாகிய டிசம்பர் 10ஆம் திகதி இப்பரிசுகள் வழங்கப்படும்.

(தொடரும்)

EDITORIAL

A Matter of Speculation

There seems to be a sigh of relief throughout the Island over the TULF decision to call off its boycott of the Parliament. The TULF kept away from the meetings of the legislature after the Police atrocities in the city of Jaffna in June 1981. They put forward five demands and announced that they would boycott meetings of the Parliament until and unless the demands were granted by the government. Under the existing Constitution a Member who keeps away from Parliament for more than three months without the prior permission of the House is liable to lose his seat. As the dead-line — November 6 — drew near, the people of the country, especially the Tamils of Jaffna the victims of frequent harassment by the Army, became restless. The possibility of the TULF members losing their seats and the nightmare recollections of the incidents at the District Development Council elections in June made them panic.

Some kind of accord seems to have been reached between the government and the TULF regarding the five demands. The TULF dropped the fifth demand viz., the impartial inquiry by an International Commission of Jurists, subsequent to the admission by a Minister of the Cabinet rank that certain elements in the Police force were responsible for the ugly incidents in Jaffna. The contention of the TULF is that the government has kept its promise by transferring a certain number of Tamil Police officers to the North and the Compensation Committee under the leadership of Lionel Fernando has started functioning. The government has in principle accepted the system of Home Guards. The TULF is back in Parliament.

Ever since the Secretary General of the TULF became the Leader of the Opposition, the Tamil problem in Sri Lanka had become an issue of international interest. Statesmen and journalists in many parts of the world are watching anxiouly the political developments of the Island and the efforts made by the President and the leaders of TULF to bring about amity among the races. The debate on the No Confidence motion against the Leader of the Opprsition early this year marked the beginning of a period of continuous maltreatment of the Tamil persons. Burning of shops and houses in the North, irregularities in the District Development Council elections, loot and arson in Negombo and in the Sabragamuwa and Army misbehaviour in Jaffna followed the shameful debate in quick succession. Despite all the laws of the land and the rhetoric of ministers and religious dignitaries, the lives of the Tamil people became miserable and the apathy of the authorities disgusting.

The relations between the leaders of TULF and the government have been so strained of late that an agreement between them was unthinkable. The sharp exchanges between the TULF members and government MPs during the No-Confidence debate and the insults hurled at the Tamil minority by responsible members of the Parliament made the possibility of a dialogue very bleak. The agreement to end the boycott is therefore a welcome break. The prospects of a monthly meeting between the TULF and the President is no doubt a pleasing venture.

The misdeeds of the Army in the North last month clearly demonstrated that no force in Sri Lanka apart from the TULF has the potent and inclination to stop the harassment and intimidation of the innocent people. In a sitution like that, of what use are the laws? What confidence can the police command and what respect can the civilian administration enjoy?

Whether the TULF tactic of entering into an agreement with the government and ending the boycott so that they may have a better justification to push through their demands is a matter of speculation. Ultimately the government policy makers will have to come to terms with harsh realities. But the presence of the TULF members in the supreme legislative body will be a source of strength to the people who had put their trust in them. — *S. J.*

Muslims Seek Clarification on White Paper

The All Ceylon Muslim Education Conference is to ask the President and the Minister of Education to say precisely what place is given to religious education in the proposed White Paper. The leader of the Conference and Principal of Zahira College Janab S. H. M. Shafie Marikar speaking at a recent meeting of Muslim Youth Organizers pointed out that the White Paper which was presented to the Cabinet in March is now a collective responsibility of all the Ministers. Hence, he holds, no Minister can plead ignorance of its preparation or give assurances at this late stage that any decision by the government will not affect religious minorities and that their rights will somehow be safeguarded.

Strangely enough, the only reference to religious education in the 28 - page - (plus appendices). document reads "A committee has been appointed to study aspects of religious education in school. Therefore proposals regarding testing of Religion etc., will have to await the report of the committee". (Item 33 on page 6). The White Paper has not declared the names of the Committee on Religious Education though the Committees on Technical Education, and National Apprenticeship Training and the Educational Reforms Committee are listed in annexes.

Happy Birthday, Nesiah Master!

On the 13th of November, Mr. K. Nesiah will be celebrating his 80th Birthday. We are happy that a career of such usefulness has been able to attain to this length of time. Mr. Nesiah was educated at St. John's College, Jaffna and the Madras University where he obtained honours in History. He first taught at St. John's College, Jaffna. In 1933 he married the eldest daughter of the late Canon S. Somasundaram. He later taught at St. Thomas' College, Mount Lavania and proceeded to London where he obtained a Diploma in Education. Finally he became a Lecturer in Education at the University, Peradeniya. It was from this position that he finally retired. He has contributed many learned articles to high class periodicals and has been in great demand on plat. forms. His value to the community has chiefly been in his counsels among our politicians, his advice being always well documented with facts and figures. We understand that a collection of some of his speeches and writings may soon be published in the form of a book. We wish him long life.

Jaffna Municipal Council Appeals on Behalf of Badulla Tamil School

Saraswathy Maha Vidyalayam, Badulla which caters to a large number of Tamil children of the district is presently occupied by armed personnel of the Army who are encamped in the buildings temporarily. Children of the school as everywhere else in the country are currently preparing for year-end local and GCE examinations. That their studies are adversely affected by the army occupations has drawn the attention of the Jaffna Municipal Council. On a proposal by the Deputy Mayor Mr. M. Aloysius the Council passed a resolution at its monthly general meeting on the 28th of October 1981 to point out the situation to the President, the Prime Minister, the Leader of the Opposition, the Minister of Education, and Mr. S. Thondaman the Minister of Rural Development.

The Mayor Mr. Rajah Visvanathan presided.

Jaffna Tutory Hours to be Limited

The Municipal Council of Jaffna is concerned that the private tutories which function in many parts of the town are conducting classes beginning as early as 6 a. m. and continuing till 8 p. m. in the night, thus giving room for student indiscipline and insecurity. The Council therefore adopted a resolution to instruct the tutories not to conduct classes before 7 a. m. or after 6 p. m. and to appeal to the Superintendent of Police to take action against the tutories which violate this regulation. Mr. Y. A. Selvanayagam MMC proposed the motion.

IN TREASURED MEMORY OF

Samuel Kanagaratnam Rasiah

Called to rest:
25th November 1959

"Our loving memories will never cease".

Fondly remembered by his loved ones here and abroad.

Does Overseas Aid Help Church Work and Growth?

Yes and No, says Mr. A. C. Dharmaraj in an article entitled "Overseas Aid — Help or Hindrance?" appearing in the latest issue of the *South India Churchman*. He explains "History shows that the Gospel can be preached without aid from overseas. Independent churches such as the Kimbaguists of Zaire, which have emerged and developed largely apart from western aid and influence show greater vitality than many of the others......Some Asian churches as in Burma, Korea grew stronger during World War II when Japanese occupation cut them off from outside.

"Aid from outside can also create internal strife. In India factions have gone to court battling over who would contrive funds from mission agencies. Outside aid also fans the flame of non-Christian resentment against such aid and makes them brand the religion as a foreign religion.

"Aid also multiplies white elephants, which the native churches can never maintain unaided. Western churches are themselves abandoning such white elephants unable to heat them, and not even the wealth of the western churches will support all the hospitals and schools, etc., they have established abroad"

Before concluding his article Mr. Dharmaraj grants that aid is indispensable but qualifies himself saying, "Overseas aid has......to be usefully given to meet the short range development to meet needs arising from natural disasters — earthquakes, famine, floods, droughts. This aid does help provided it is operated through bodies which are representative of responsible leadership of the region for which the aid is offered and whose accountability is beyond reproach and whose effective prosecution of the development programme can be verified and assessed".

Wedding

The service of blessing on the marriage of Mr. Franklin David, Personal Assistant to the Territorial Commander of the Salvation Army and son of Mrs. Brigadier M. David to Miss Sumana Banda member of the CSI Church, Alaveddi took place on Monday the 2nd November 1981. Colonel P. W. Perera T. C. preached the homily at the service conducted by the Rev. A. Jeyakumaran, Circuit Pastor.

Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB/100/25/81.

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 6th November 1981 and published by Mr. Alvappillai Rajasingam, 330. Navalar Road, Jaffna.